**2011**
**டிசம்பர்**
**1**
**வியாழன்**

**உலக எய்ட்ஸ் நாள்**

காலை
யோவா. 1:35–45

தி. வ.
யோவா. 1 : 41
**"மேசியாவைக் கண்டோம்"**

மாலை
மீகா. 4:1–5

சிந்தனை
**யான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுக,**



# மேசியா

இவ்வுலக வாழ்வில் மேசியாவை அறிவதும், மேசியாவைக் கண்டடைவதும் நமது வாழ்க்கையின் தேடலாகும். "எங்கும் நிறைந்த இறைவனை", பல வேளைகளில் நாம் உணர முடியாதபடிக்கும், காண முடியாதபடிக்கும் எத்தனை எத்தனை தடைகள்! இஸ்ரவேல் ஜனங்களுக்கு பக—லும், இரவிலும் ஆண்டவர் கூடவே இருந்தார். ஏன்? நம்மோடும் இருக்கிறார். ஆனால் காணமுடியவில்லை.

அந்திரேயா என்பவர் மேசியாவைக் கண்டதாக தம் சகோதரனிடம் சொல்கின்றார். அதோடு முடிந்ததா? தம் சகோதரனை இயேசுவண்டைக்கு அழைத்து வருகின்றார். எத்தனை மகிழ்ச்சி. இருவரும் மேசியாவைக் கண்டனர். ஆனால், இன்று நாம் இயேசுவண்டைக்கு வர முடியாமல் தடுக்கின்ற சில காரியங்களை நினைத்துப் பார்ப்பது நல்லது. எந்த ஒரு சந்தோஷத்தையும் நம் உடன் பிறந்தோருடன் பகிர முடிகிறதா? அந்திரேயா தம் உடன்பிறந்த சகோதரனிடம் ஓடோடிச் சென்று பகிர்ந்து இருவரும் இணைந்து மேசியாவைக் காண்கின்றார்கள்.

இன்றைய சூழ—ல் நமது குடும்பத்தில் எத்தனையோ நிகழ்வுகளைப் பிறரோடு பகிர மனமற்றவர்களாய் மனதுக்குள்ளே அடக்கிவைத்து மனசஞ்சலத்துடன் வாழ்ந்து வருகிறோம். அண்மையில் ஒருவரை சந்தித்தேன் மெ—ந்த தோற்றம், தளர்ந்த நடை, ஏன் இப்படி என வினாவிய போது, அதுவா, என் பிரச்சனையை வெளியே சொல்ல முடியவில்லை. இதனால் இரண்டு முறை மாரடைப்பும் வந்துவிட்டதே. என் பிரச்சனையை யாரிடம் சொல்வது. பயமாய் இருக்கிறது என்றார். அன்பானவர்களே நாமும் அந்திரேயாவை போல எதையும் மனதுக்குள்ளே மறைத்து வைக்காமல் பிறரிடம் சொல்வோம். அப்பொழுததான் எங்கும் நிறைந்த இறைவனை, ஒருவர் மற்றவர் முகத்தில் காண முடியும். அன்பால், பகிர்வால் தன்னை வெளிப்படுத்திய மேசியாவை நாமும் காணலாம். மேசியாவைக்காண வாழ்வை அர்ப்பணித்து அவரிடம் செல்வோம். பலர் மேசியாவைக் காண வழிகாட்டுவோம்.



**2011**
**டிசம்பர்**
**2**
**வெள்ளி**

காலை
லூக். 2:25–33

தி. வ.
லூக். 2 : 32
**"உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது"**

மாலை
ஏசா. 49:1–7

சிந்தனை
**நம்பிக்கை வழி மீட்புபெறுவோம்**



# இரட்சண்யம்

உலகில் எத்தனை ஆண்டுகாலம் வாழ்கின்றோம் என்பதல்ல எப்படி வாழ்கின்றோம் என்பதில் தான் வாழ்வின் வெற்றி அமைகின்றது. ஒரு குறிப்பிட்ட வயதிற்கு அப்பால் வாழ்க்கை எப்படி அமையுமோ? பிள்ளைகள் எப்படி கவனிப்பார்களோ? வியாதி வந்தால் என்ன ஆகிவிடுவோமோ? என்ற எண்ணங்களில் மனம் கலங்கிக் கொண்டு, வாழ்க்கையின் சந்தோஷத்தை இழந்து கொண்டிருக்கிறோம். இப்படி வாழும் நமக்கு இந்த சிமியோன் சிறப்பான எடுத்துக்காட்டு.

சிமியோனின் நேர்மையான வாழ்க்கை, இறைப்பற்று, நம்பிக்கைக்குரிய எதிர்பாப்பு, தூய ஆவியின் வரம் இவைகள், தான் வயது சென்றாலும் நம்பிக்கையை இழக்காதபடிக்குப் பொறுமையாக இருக்கத் தூண்டியது. எனவே தான் இயேசுவைக் கரத்தில் ஏந்தி "இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது" என்கிறார்.

நியூசிலாந்தை சார்ந்த "மார்க் இஸ்கி—ஷ" என்பவர் தம் இரண்டு கால்களையும் இழந்த போதிலும் "நம்பிக்கை இழக்காததினால்" செயற்கை காலைப் பொருத்திக் கொண்டு இமய மலையில் ஏறினார் என்பது சரித்திரம். நாம் எல்லாரும் வாழும் சரித்திரமாய் இருக்கிறபடியால் வெற்றியை நோக்கிப் போராடிக் கொண்டே இருக்க வேண்டும். சிமியோனின் காத்திருப்புப் போராட்டம் ஒருநாள் இரண்டு நாள் அல்ல. வயது முதிரும் வரை. சிமியோனுக்கு வயது சென்றதே தவிர அவரின் நம்பிக்கைக்குரிய எதிர்ப்பார்ப்பு கொஞ்சமும் குறையவில்லை. இந்த முதிர்ந்த தாத்தாவுகே இவ்வளவு நம்பிக்கை இருந்தது என்றால், ஏன்? நம் நம்பிக்கையில் தொய்வு சிமியோனின் கரங்களில் இருந்த குழந்தை, இன்று நம் அருகில் இருக்கிறது. அவர் நமக்குள் இருக்கிறார். நாம் செல்லும் இடமெல்லாம் அவர் நம் கூடவே வருவார். அவர் நமக்குத் தோள் கொடுப்பார். நாம் நம்பிக்கையில் வளரும் போது சிமியோன் தாத்தாவைப் போல் "உமது மீட்பை என் கண்கள் கண்டன" என சந்தோஷமாய் சொல்லும் பேற்றினை பெறுவோம்.

**2011**
**டிசம்பர்**
**3**
**சனி**

காலை
யோ. 1:29–34

தி. வ.
யோவா. 1 : 29
**"இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி"**

மாலை
உபா. 18:13–19

சிந்தனை
**உனக்காக நான் மரித்தேன் எனக்காக நீ என்ன செய்தாய்.**



# பரிகாரி

அமெரிக்காவில் இருந்து ஒருவர் குடும்பத்துடன் இஸ்ரயேலுக்குத் திருப்பயணம் சென்றார். எருசலேமில் சுற்றிப் பார்த்து கொண்டிருந்தப்பொழுது, அவருடைய மாமியார் திடீரென்று இறந்துவிட்டார். மாமியாருடைய உடலை எகிப்தில் இருந்து அமெரிக்கா கொண்டு செல்ல 25,000 ரூபாய் ஆகும். ஆனால் எருசலேமிலே புதைத்தால் வெறும் 1000 ரூபாயே ஆகும். என்ன செய்யலாம் என்று மற்றவர்கள் அவரிடம் கேட்டப்பொழுது, கொஞ்சம் யோசித்துவிட்டு "எவ்வளவு பணம் செலவழித்தாலும் பரவாயில்லை என் மாமியாரைச் சொந்த ஊருக்கே கொண்டு போவோம்" என்றதும், எல்லாருக்கும் ஆச்சரியம் மாமியார் மீது இவ்வளவு பாசமா? என்று. அவரை பாராட்டியபொழுது அவர் சொன்னாராம் "அது பாசம் இல்லை. எருசலேமிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒருவரை அடக்கம் செய்தார்கள். அவர் மூன்றாம் நாளிலே உயிருடன் எழுந்துவிட்டார். ஒருவேளை என் மாமியாரும் அப்படி வந்துவிட்டால்! அதனால் இப்படி சொன்னேன் என்றாராம். அன்பானவர்களே இன்றைய நாளில் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பது என்பதோ, ஒருவருக்கொருவர் இணைந்து இருப்பது என்பதோ சற்று பாரமாகவே இருக்கிறது.

முழுக்குநர் — யோவான் தான் வாழ்ந்த காலத்தில் பிறரின் தவறைச் சுட்டிக் காட்டினார். ஆனால் இயேசுவோ, சுட்டியதோடு நில்லாமல் மனிதன் சுமக்க முடியாத பாரத்தை தன் தோளின் மீது சுமந்து கொண்டு, மனிதனை மீட்புக்கு வழிநடத்துகிறார். ஆக பரிகாரி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. இவர் நமக்காக அடிக்கப்படுகிறார். அவமானப்படுத்தப் படுகிறார். எத்தனையோ அவமானங்களை நமக்காய் இயேசு சுமக்கிறார். எனவே இவர் கடவுளின் ஆட்டுக்குட்டி. எனவே எனக்காகப் பரிதாபபட யாரும் இல்லை என சவுலைப்போல புலம்பவும் கவலைப்படவும் வேண்டாம். நமக்காக, நம் குரலை கேட்டு, நம் பின்னாலே வர ஆட்டுகுட்டியாக, தன்னையே கொடுக்க ஆண்டவர் வருகிறார். ஆக, நமது பரிகாரியான ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மில் உண்டு.



**2011**
**டிசம்பர்**
**4**
**ஞாயிறு**
**விவி–ய ஞாயிறு**

காலை
யோ. 6:35–51

தி. வ.
யோ. 6 : 51
**"இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்"**

மாலை
நீதி. 9:1–6

சிந்தனை
**வாழ்வருளும் உணவை தினமும் உண்போம்.**



# இறைவாக்கு - வாழ்வருளும் அப்பம்

அப்பம் என்றவுடனேயே நம் சிந்தனையில் வருவது திருவிருந்தில் அடையாளமாக நாம் உட்கொள்ளும் சிறிய அளவிலான அப்பமே. திருமறையில் அப்பம் என்பது இஸ்ரயேல் மக்களின் சாதாரண உணவைத்தான் குறிப்பிடுகிறது. யூதர்கள் தங்களின் அடிப்படைத் தேவைகள் கடவுளாலேயே தங்களுக்கு அருளப்பட்டன என்று எண்ணினர். ஆகவே அப்பம் கடவுளின் ஈவுகளில் ஒன்று *(ரூத் 1 : 6, சங். 104 : 14)* எனவும் நம்பப்பட்டது. இந்த நம்பிக்கையினால் தான் அப்பம் நிறைவாக இருத்தல் கடவுளின் தயவுக்கு அடையாளம் என்றனர். *(லேவி. 26 : 5, உபா. 8 : 9)*. உணவின்மை வாழ்வில் அழிவை ஏற்படுத்தும். ஆகவே உணவு மனித வாழ்வுக்கு ஆதாரம்.

மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை என தெளிவாய் குறிப்பிடுகிறார் இயேசு. உணவை விட இறைவனின் வார்த்தைகளால் ஏற்படும் சமாதானமும், நல்லுறவுமே இங்கு வ—யுறுத்தப்படுகிறது. வானத்தி—ருந்து இறங்கி வந்த உணவு நானே என்று கூறுகிற நம் ஆண்டவர் கிறிஸ்து அப்பத்தில் பங்கு பெறுவதும், ஒரே பாத்திரத்தில் பானம் பண்ணுதலும் வாழ்வின் உயிரோட்டமுள்ளதாக அமையும் என தெளிவுப்படுத்துவதையும் காணலாம். ஆக கடவுளின் பந்தியில் பங்குபெறுவோர் "எல்லோரும் ஒன்றாய் இணைக்கப்படுகிறார்கள்" *(1 கொரி. 10 : 17)*.

வேறுபாடுகளைக் களைந்து அனைவரையும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இணைப்பது இந்த அப்பம். வனாந்தரத்தில் இஸ்ரவேலருக்கு "வனாந்திரத்து அப்பம்" தேவ பெலனாய் இருந்தது. இதனைப் போன்று "நானே வாழ்வு தரும் அப்பம்" என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னையே தருவதும், நாம் அதை விசுவாசத்துடன் பெற்றுக் கொள்வதும் இறைபெலனாக அமைகிறது. ஆக ஆண்டவரே வாழ்வின் பெலனானவர். இவ்வுலகம் நம்மை திருப்திப்படுத்தாது. ஆண்டவர் நம்மை திருப்திப்படுத்துவார். அதற்கு நாம் இணைந்து இறைவனோடு அவர் தரும் திருவாக்காம் வாழ்வருளும் அப்பத்தை தினமும் உண்போம்.

## நலம் அருளும் இறைவாக்கு

**2011**
**டிசம்பர்**
**5**
**திங்கள்**

காலை
சங். 107:1–20

தி. வ.
சங். 107 : 20
**"அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்கி... தப்புவிக்கிறார்"**

மாலை
லூக். 4:16–21

சிந்தனை
**இறைவார்த்தையை பின்தொடர்ந்து நாம் பெறுவோம்.**

எல்லா உயிர்களும் நன்மைகளால் நிறைந்து பூரிப்படையவே விரும்புகிறது. ஆனால் துன்ப சூழல்களில் உணர்வுகளில் சோர்வடைந்து விடுவதும். பின் உணர்வுகளில் வ—மை பெற ஒரே வழி இறைவார்த்தை மட்டுமே என்பதனை திருமறை கற்றுத் தருகிறது. கடவுளின் வார்த்தை வல்லமை நிறைந்தது. "உன் படுக்கையை எடுத்துகொண்டு நட. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றதும் பிணியாளி சுகமானான். ஆம் ஆண்டவர் இயேசுவின் வார்த்தை பிணியாளிகளைக் குணமாக்கும். காரணம் அந்த வார்த்தையில் பரிவு, ஆற்றல், இரக்கம், அன்பு, கரிசனை, தியாகம் இவைகளெல்லாம் இருக்கிறது.

ஒருவிசை பேரறிஞர் டால்ஸ்டாய் என்பவர் சந்தை ஒன்றிற்கு சென்றிருந்தார். அப்பொழுது பிச்சைக்காரன் ஒருவன் அறிஞரிடம் கைநீட்டி பிச்சைக் கேட்டான். அறிஞரும் ஏதேனும் சில்லறை இருக்கிறதா என தேடிப் பார்த்தார். ஒன்றும் இல்லாததால் "தம்பி" என்னிடம் காசுகள் இல்லை என்று சொல்—விட்டு நடக்க முற்பட்டார். ஆனால் அந்த பிச்சைக்காரனோ அவர் முன்னால் ஓடோடி வந்து ஐயா, எனக்கு நீங்கள் காசே தர வேண்டாம் என்று கண்ணீர் வழிய கூறிவிட்டு, "ஐயா எனக்கு அந்த காசை விட பெரிய மகிழ்ச்சியைத் தந்துவிட்டீர்கள்". "தம்பி" என்று அழைத்த அந்த ஒரு வார்த்தை போதும் என்றானாம்.

இறை வார்த்தைகள் நமக்கு கொடுக்கப்பட்டிருப்பது நாம் நன்றாக இருப்பதற்கும். நமது ஆயுளை நீடித்து பெறவுமே. சங்கீதக்காரன் *119 : 107*—இல் "ஆண்டவரே சிறுமைபடுகிற எனக்கு உமது வார்த்தையால் உயிர்தாரும்" என வேண்டுகிறார். காரணம் ஆண்டவரின் வார்த்தையே நமக்கு உயிரானது. ஆக வல்லமையுள்ள வார்த்தை நம்மை பெலனடையச் செய்ய வேண்டும் என்றால் நாம் ஆண்டவரின் வார்த்தையின் படி நடக்க வேண்டும். *உபா. 6 : 5, 6*—இல் இவ்வுண்மையே வ—யுறுத்தப் பட்டுள்ளது. இறைவார்த்தைகள் நமக்கு நலமான வாழ்வைத் தருவதோடு புது வாழ்வுக்கு நேராய் நம்மை நடத்தக்கூடியவை. இறைவார்த்தைக்கு கீழ்படிந்து ஆரோக்கியமாய் வாழ்வோம்.



## மீட்பருளும் இறைவாக்கு

**2011**
**டிசம்பர்**
**6**
**செவ்வாய்**

காலை
அப். 13:16–26

தி. வ.
அப். 13 : 26
**"...இந்த இரட்சிப்பின் வசனம் உங்களுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது"**

மாலை
சங். 119:41–48

சிந்தனை
**இறைவாக்கை சொந்தமாக்கி மீட்பை பெறுவோம்.**

மனித வாழ்வு, காலையிலே முளைத்துப் பூத்து, மாலையிலே அறுப்புண்டு உலர்ந்து போகிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது *(சங். 90 : 5—6)*. கிறிஸ்து தனது சிலுவை மரணத்தின் மூலம் முடிவில்லா மீட்பினை மனுக்குலத்திற்கு சம்பாதித்துத் தந்துள்ளார். பழைய ஏற்பாட்டிலே இஸ்ரயேல் மக்கள் ஆசாரிப்புக் கூடாரம் அமைத்து இறைவழிபாடு துவங்கிய காலத்தில் இளங்காளை, வெள்ளாட்டுக்கடா போன்றவைகளை குற்ற நிவாரணப்ப— என்றும், பாவ நிவாரண ப— என்றும் கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தி மீட்பினைச் சொந்தமாக்கி வந்துள்ளனர். *லேவி.. 1 : 4—5, 10—13.* ஆனால் இத்தகு மீட்பின் அனுபவம் முடிவில்லாத முழுமையான ஒன்றல்ல. என்பதால் தான் கிறிஸ்து தனது சொந்த இரத்தத்தையே சிந்தி முடிவிலா நித்திய மீட்பினைச் சம்பாதித்துத் தந்தார். இதனைத் தான் பவுலடியார் இன்றைய தியான பகுதியில் ஆண்டவர் நமக்கு தரும் மீட்பாக கருதுகிறார்.

நமக்கு அருளப்பட்ட இந்த மீட்பு, நமக்கே சொந்தமாக வேண்டும் என்றால் *(கொலே. 3 : 8)* கோபம், மூர்க்கம், தூஷண வார்த்தைகள், *(எபே. 4:31)* கூக்குரல், துர்குணங்கள், *(கலாத். 5 : 19, 20, 21)* விபசாரம், வேசித்தனம், பில்—சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், பிரிவினைகள், மார்க்கப்பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டங்கள் இவைகள் சாகடிக்கப்பட வேண்டும். இவைகள் மீட்பைப் பெறுவதற்கான தடைகற்கள். காரணம் இவை மனித சுபாவங்களோடு தொடர்புடையது. இவைகளை விட்டு மீட்பைச் சொந்தமாக்கும்பொழுது நாம் (a) கடவுளோடு இணைக்கப்படுவோம் *(எபே. 2 : 16)*. (b) அழிவுக்குரிய உடல் அழியாமையை அணியும் *(1 கொரி. 15 ; 53)*. (c) ஓர் உயிரோட்டம் உள்ள வாழ்வு இவைகளை *(1கொரி. 15 : 52)* பெற்றுக்கொள்வோம். மீட்பைப் பெற நம் வாழ்வில் பிரயோஜனமற்றதை (பாவம்) சாகடிக்கும்போது வாழ்வாகிய மீட்பு சாத்தியமாகும். இறைவார்த்தைகளை ஏற்று பாவத்திற்கு விலகி மீட்பைச் சொந்தமாக்கியவர்களாய் தூயவாழ்வு வாழ அர்ப்பணிப்போம்.

# நம்பிக்கையூட்டும் இறைவாக்கு

**2011**
**டிசம்பர்**
**7**
**புதன்**

காலை
மீகா. 5:1–5

தி. வ.
மீகா. 5 : 2
**"...இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்தி-ருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்"**

மாலை
லூக். 1:26–38

சிந்தனை
**சிறுமையில் இறைவனைப் பற்றுவோம் மேன்மை பெறுவோம்.**

இஸ்ரயேலர்கள் தங்களை அரசர்கள் ஆட்சி செய்தால் போதும் என்று சொன்னவர்கள். காலப்போக்கில் ராஜாக்களின் அதிகாரப்போங்கு, அட்டூழியம், இச்சை, நிர்வாக திறமையின்மை இவைகளைக் கண்டு மனம் ஒடிந்து போய், வாழ்க்கையை பற்றிய நம்பிக்கை இழந்த நேரத்தில் மீகா தீர்க்கனின் வார்த்தை நம்பிக்கை கொடுப்பதாய் அமைந்தது. "உன்னை ஆளப் போகிறவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்" என்ற வாக்கு புது நம்பிக்கையைக் கொடுத்தது. அதுவும் யூதாவின் குடும்பத்துக்குள் சிறியதாகிய பெத்லகேமில் இருந்து தோன்றுவது, அதனைக் கூட இரட்டிப்பு மகிழ்ச்சி எனலாம் காரணம் சிறியதை ஆண்டவர் உயத்துகிறார்.

மனிதர்களில் இருக்கின்ற ஒரு பலவீனம் நான் சிறியவன், எளியவன் என்று தம்முடைய தாழ்வு மனப்பான்மையினாலே நம்பிக்கை இழந்துவிடுவர். திருமறையிலும் மோசேயும் ஆண்டவரிடம் இந்த தாழ்வு எண்ணத்தைப் பதிவு செய்தார். ஆனால் ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளைப் புழுதியில் இருந்து எடுத்து சிங்காசனத்தில் அமர வைக்கிறார்.

நான் சிறியவன் என்றோ பணம் இல்லாதவன் என்றோ கலங்கிக் கொண்டு உட்கார்ந்து விடுவது அறிவீனம் இந்த ஆண்டவர் நம்மிலேதான் வெளிப்படப் போகிறார். வெளிப்படும் நாளிலே நாம் யோசேப்பைப் போல் சிங்காசனத்தில் அமர வைக்கப்படுவோம். அன்று ஆட்டிடையனான தாவீது ராஜாவானான். இன்று பரம ஏழையான அப்துல்கலாம் குடியரசு தலைவரானார். இதெல்லாம் யாரால் நடந்தது தாவீதை சிங்காசனத்தில் அமர்த்தியவர் நம்மை அமர்த்த மாட்டாரா! சிறிய பெத்லகேம் எத்தனை பெரிய பேரை பெற்று புகழ்பெற்றதோ, நாமும் புகழின் உச்சிக்கே போவோம். அதற்கு ஆண்டவர் துணைநிற்க நம்மை நாமே அர்ப்பணிப்போம் தாழ்வு மனப்பான்மையை தூக்கி எறிந்து விட்டு தாழ்மையைக் கற்றுத் தந்த பெத்தலை நாதரை மனதில் பெற்று வளமும் சமாதானமும் பெறுவோம்.



# ஆலோசனை தரும் இறைவாக்கு

**2011**
**டிசம்பர்**
**8**
**வியாழன்**

காலை
சங். 32

தி. வ.
சங். 32 : 8
**"..உன் மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்"**

மாலை
கலா. 6:1–6

சிந்தனை
**இறைவனைப் பற்றி இறை ஆலோசனைப் பெறுவோம்.**

ஒரு மனிதன் யாத்திரைக்கு செல்வதற்கு தேவையான பொருட்களை எடுத்துச் செல்வது போல, மனித வாழ்வு பயணத்திற்கு தேவையான ஆறுதலையும், தேறுதலையும் இறைவாக்கு ஊக்கமாய் தருகிறபடியால் புனித அகுஸ்தீன் அவர்கள் அவைகளை தம் படுக்கை அறையின் சுவரிலே எழுதி வைத்திருந்தார். அவைகள் அத்தனை மிகச் சிறப்பான ஆலோசனைகளைக் கொண்டது. சங். 32. சங். 25 : 12—இல் கர்த்தருக்கு பயப்படுகிறவர்களுக்கு அவர் தமது வழியை போதிக்கிறவர் என்பதின் மூலம் கர்த்தருக்கு பயப்படுகிறவர்களே கர்த்தரின் ஆலோசனையை பெற முடியும் என்பதனை உணரலாம்.

"நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்" என்கிற நம் ஆண்டவர், இயேசு வழியாய் நானே வழியும் உண்மையும், வாழ்வுமாயிருக்கிறேன் என்கிறார். வழிகாட்டும் உத்தமராக ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தினார். சங்கீதகாரனாகிய தாவீதுக்கு ஒரு மேய்ப்பனைப் போல இருந்து வழிகாட்டினார். எனவே தாவீது "அவர் என்னை அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகின்றார்" என்கிறார். சங். 25 : 9. சாந்த குணம் உள்ளவர்களுக்கு ஆண்டவர் வழிகாட்டுகின்றார். என்று தெளிவுபட கூறப்பட்டுள்ளது. "உன்மேல் என் கண்ணை வைப்பேன்" என்பதின் மூலமாய் ஆண்டவர் தம் முழு கரிசனையையும் நம் மீது வைத்திருப்பதை நாம் காணலாம். 11 நாளா. 16 : 9—இல் "தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்க பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது".

ஆகவே சோர்ந்து போகிற நமக்கு, இன்றைய பொழுது எப்படி அமையுமோ என்ற தவிப்பில் இருக்கும் நமக்கு ஆண்டவர் நம்மீது எவ்வளவு கரிசனை உள்ளவராய் இருப்பது புரியும் அல்லவா. நமக்கு அறிவை அவர் தருவது மட்டுமின்றி எப்படி நடக்க வேண்டும் என்ற ஆலோசனையைத் தருகிறார். நாம் போகும் திசையில் அவர் நம்மைக் கவனித்து கொண்டேயிருக்கிறார். இதைவிட நமக்கு இன்று வேறு என்ன வேண்டும். தைரியமாய் கடமைகளைச் செய்வோம். ஆண்டவர் நம்மோடு இருப்பாராக.

# ஆற்றல்படுத்தும் இறைவாக்கு

**2011**
**டிசம்பர்**
**9**
**வெள்ளி**

காலை
நியா. 6:11–16

தி. வ.
நியா. 6 : 14
**"...உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ"**

மாலை
2கொரி. 12:1–10

சிந்தனை
**ஆற்றலிழந்த நாம் இறை வார்த்தையை பெற்று ஆற்றல் பெறுவோம்.**

இஸ்ரவேலர் கானானுக்கு வந்தப் பிறகு ஆண்டவர் தமக்கு அருளிய நன்மைகளை மறந்து, பழைய பாவ ஜீவியத்துக்குள் புரள ஆரம்பித்தனர். அப்பொழுது, எதிரியாகிய மீதியானியரின் கை ஓங்க ஆரம்பித்தது. எப்பொழுதெல்லாம் நாம் தூய வாழ்வை தவறுகிறோமோ அப்பொழுதெல்லாம் சாத்தான் வலுபெறுவான். மீதியானியர் கை ஓங்கியதால் இஸ்ரயேலர் ஒடுக்கப்பட்டனர். தங்கள் விளை நில பலன்களை தாமே எடுத்து கொள்ள முடியா நிலை. அப்பொழுது தான் கிதியோன் என்ற வாலிபனிடம் தூதன் உரையாடி "நீ இதே ஆற்றலுடன் மீதியானியரிடம் செல்" என்றான். பயந்து ஒளிந்து அறுவடை செய்தவன், யாருக்கு பயந்தானோ அவர்களிடம் நேருக்கு நேர் நிற்கும் துணிவையும் ஆற்றலையும் பெறுகிறான். காரணம் நம் ஆண்டவர் ஆற்றல்படுத்துகிறவர்.

இன்றைய சூழல் நம் வாழ்க்கையைப் பற்றி. இன்றைய விலைவாசிகள் பற்றி, வேலைவாய்ப்புகள் பற்றி, நமக்கு பயம். நாம் கண்ணில் காண்கின்ற மற்றும் அறிகின்ற ஒவ்வொரு விஷயங்களைப் பற்றியும் பயம். ஐயோ நாம் எப்படி வாழ போறோம் என்று. அன்பானவர்களே, நம் ஆண்டவர் சொல்கிறார் "உன்னை அனுப்புவது நான் அல்லவா" இந்த ஆற்றலோடு போ. என நம்மை ஆண்டவர் தைரியப்படுத்துகிறார். கோதுமை மணியின் கதிரை கூட அறுவடை செய்ய பயப்படும் கிதியோன். தான் நியாயாதிபதியாய் வருவோம் என கனவில் கூட நினைத்தது இல்லை. ஆனால் ஆண்டவர் அவனை நியாயாதிபதியாய் மாற்றினார். காரணம் ஆண்டவர் அவனை ஆற்றல்படுத்தினார்.

இதைப்போல நம்மை ஆண்டவர் ஆற்றல்படுத்துவார். வாழ்க்கை பயணத்தில் செங்கடலைக் கண்டு மிரளாதீர்கள். எரிகோவைப் பார்த்து எரிச்சல் கொள்ளாதீர்கள், பெலிஸ்தியனை போன்ற பெரும் படையை பார்த்து மனம் துவண்டு விடாதீர்கள். ஆண்டவர் உனக்கு ஆற்றல் தருவார். செங்கடலைப் பாதையாய் மாற்றின ஆண்டவர் புது பாதையை தெளிவாய் காட்டி நம்மையும் நடத்துவார்.



# ஆற்றுப்படுத்தும் இறைவாக்கு

**2011**
**டிசம்பர்**
**10**
**சனி**
**உலக மனித உரிமை நாள்**

காலை
ஏசா. 54:1–17

தி. வ.
ஏசா. 54 : 8
**"...நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்"**

மாலை
ரோம. 15:1–7

சிந்தனை
**துன்பங்களில் இறைவனோடு இறைக்கரம் கோர்ப்போம் அவர் ஆற்றுப்படுத்துவார்.**

உண்மையும், பேரன்பும் கொண்ட நம் ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் கைவிடமாட்டார். இஸ்ரயேலர்கள் பாபிலோனிய சிறையிருப்புக்கு பிறகு நம் ஆண்டவர் நம்மை மறந்துவிட்டார் என்றும், பல வேளைகளில் நம் ஆண்டவர் கைவிட்டு விடுகிறார் என்றும் ஆண்டவரை மிகவும் பரிதாபமாய் நோக்கியபொழுதுதான், ஆண்டவர் சொல்கிறார். "பிள்ளைகளே, இமைப்பொழுதே என் முகத்தை உனக்கு மறைத்தேன். ஆயினும் என்றுமுள பேரன்பால் உனக்கு இரக்கம் காட்டுவேன். என்று தம் பேரன்பை வெளிகாட்டினார்.

யோசேப்பு தம் சொந்த சகோதரர்களின் அன்பைப் பெற முடியாமல், சகோதரர்களாலே எத்தனை வேதனைகள் அனுபவித்தார். யோசேப்புக்காய் பேரம் பேசினர். யோசேப்புக்காய் குழி தோண்டினர். யோசேப்புக்காய் தகப்பனிடம் பொய் பேசினர். இத்தனை இக்கட்டான சூழலும் யோசேப்பு மீது இருந்த ஆண்டவரின் பேரன்பு அளவிட முடியாததே. இன்று இதே பேரன்பை நாம் வாழ்வில் பெற பவுலாரை போல இறை சித்தத்துக்கு வாழ்வை ஒப்புக் கொடுப்போம். அப்பொழுது பெரிதான நடத்துதலை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் தம் திருப்பணிக் காலங்களில் தம் பேரன்பை ஏழைகள் மீதும், இயலாதோர் மீதும், பாவிகள் மீதும் இரக்கம் கொண்டார். ஒருமுறை குற்றம் சுமத்தப்பட்ட பெண்ணை எல்லோரும் கல்லெறிந்து கொலை செய்ய நினைக்கின்றபொழுது "நீர் போகலாம் இனி பாவம் செய்யாதீர் (யோவா. 8 : 11) என்று தாயை போன்று பேரன்பைக் காட்டினார். இப்படிப்பட்ட நம் ஆண்டவர் தம் பேரன்பால் நம்மீதும் இரக்கம் கொண்டபடியால் நாம் இன்றைய பொழுதை நினைத்து பயப்படாமல் மனத் தைரியத்தோடு கடமைகளை செய்வோம். ஆண்டவர் நம்மை நடத்துவாராக.

# விடுதலை வாழ்வின் நம்பிக்கை

**2011**

**டிசம்பர்**

**11**

**ஞாயிறு**

காலை

செப். 3:14–20

தி. வ.

செப். 3 : 17

**“உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார் ... அவர் இரட்சிப்பார்”**

மாலை

1பேது. 3:8–16

சிந்தனை

**இறை நம்பிக்கை விடுதலை தரும்.**

அமெரிக்காவை நிறவெறி நீண்ட காலம் ஆட்டிப்படைத்தது. அங்கு கறுப்பர்கள் அனுபவித்த கொடுமைகளுக்கு அளவில்லை. “மனிதர்கள் அனைவரும் சமம்” என்று அமெரிக்க அரசியல் சட்டம் வகுத்துத் தந்த தாமஸ் ஜெபர்சனே தன் விவசாயப் பண்ணையில் 132 கறுப்பர் இன அடிமைகளை வைத்திருந்தார். அன்று 38 இலட்சம் அடிமைகள் அமெரிக்காவில் இருந்தனர். மனிதர்கள் அனைவரும் சமம் என்கிறது அரசியல் சட்டம். ஆனால் அடிமைகளாக கருப்பர்களை வைத்திருக்கவும் அது அனுமதிக்கிறது. சட்டம் ஒரு கழுதை என்றார் ஆபிரகாம் —ங்கன். தொடர்ந்து அமெரிக்காவில் அடிமை நிலையை ஒழிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டார் இவரது முயற்சியால் அடிமைகளின் வாழ்வில் ஒளி பிறந்தது. விடுதலையைக் குறித்த நம்பிக்கை ஏற்பட்டது. 1863 ஜனவரி முதல் நாள் வெள்ளைமாளிகையில் அடிமை ஒழிப்புச் சட்டத்தை ஆபிரகாம் —ங்கன் நிறைவேற்றினார். ஆதிக்க ஆற்றலும், அதிகாரமும் கொண்ட ஒரு சமூகம் வ—மை குன்றிய மற்றொரு சமூகத்தை அடிமைப்படுத்தி வைத்திருப்பது பாவமும், ஒழுங்கற்ற வாழ்வு முறையும், இறையுறவி—ருந்து நம்மைப் பிரித்து தீமைக்கு நம்மை அடிமையாக்கிவிடும் என்பது ஆன்மீக உண்மையாகும்.

பாவத்தாலும், அடிமைத்தனத்தாலும் நசுக்கப்பட்டு நம்பிக்கையிழந்து காணப்பட்ட இஸ்ரயேல் மக்களுக்கு நம்பிக்கையூட்டிய இறைவார்த்தைகளே நமக்கு இன்றையச் சிந்தனையாகத் தரப்பட்டுள்ளன. நாடு கடத்தப்படல், அடிமை வாழ்வு, இறையுறவில் விரிசல், துன்பம் இவையெல்லாவற்றி—ருந்தும் கடவுள் அவர்களை விடுவிப்பார் என்ற நம்பிக்கையை செப்பனியா தீர்க்கர் ஏற்படுத்தினார்.

வாழ்வின் எல்லா நிலைகளிலும் வாழும் கடவுள் நம்மிடையே உண்டு. இறைவன் தமது அன்பினால் நமக்கு புத்துயிர் அழிப்பார். நம் துன்பத்தை அகற்றி விடுவார். அடிமை நிலையி—ருந்து நம்மை விடுவித்து உரிமை வாழ்வை வழங்குவார் என்னும் நம்பிக்கையோடே வாழ்வைத் தொடருவோம்.



# பாவத்திலிருந்து விடுதலை

**2011**

**டிசம்பர்**

**12**

**திங்கள்**

காலை

மத். 1:18–22

தி. வ.

மத். 1 : 21

**“...அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்”**

மாலை

புல. 3:22–32

சிந்தனை

**மனிதன் பாவத்தி—ருந்து விடுதலை பெற இயேசு பரிகாரமாக்கப் பட்டார்.**

பாவம் என்றால் என்ன என்பதைச் புரிந்துகொள்ள மனித இனத்தின் வரலாறு தொடக்கமே ஆதாரமாக அமைந்துள்ளது. பாவம் என்ற சொல் அங்கு பயன்படாவிடினும் பாவம் என்பது என்ன என்று புரிவதற்கு அது உதவுகின்றது. மனிதன் செயல்படத் துவங்குவதற்கு முன்னமே பாவம் அவனது ஆவியைக் கெடுக்கிறது (Ex. ஆதாம்) இதனால் மனிதன் யாருடைய சாயலாகப் படைக்கப்பட்டானோ அந்த இறைவனோடுள்ள தொடர்பு துண்டிக்கப்படுகிறது. இது மனித சமூகத்தினரிடையே உள்ள உறவுகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. “தவறு எதுவும் பாவமே” (Anything wrong is sin). இந்தக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மனுக்குலமே பாவத்தில் மூழ்கியிருப்பதை உணரலாம். பாவி பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான்.

இறைசாய—ல் உருவாக்கப்பட்ட மனிதன் மீட்கப்பட தீர்க்கர்கள், அரசர்கள், ஆயர்கள் வழியாகவும் தமது வார்த்தைகள் வாயிலாகவும் இறைவன் பல முயற்சிகளை மேற்கொண்டார். மக்களோ எல்லாத் தவறுகளையும் செய்து தங்கள்மேல் இரத்தப்பழிகளைக் குவித்தனர். இதை உணர்ந்த இறைவனின் இதயக் குமுறல் இதோ, “நம் மக்களே என் மாட்சிமையை பயனற்ற ஒன்றிற்காக மாற்றிக்கொண்டனர். பொங்கி வழிந்தோடும் நீரூற்றாகிய என்னைப் புறக்கணித்தார்கள். தங்களுக்கென்று தண்ணீர் தேங்காத உடைந்த குட்டைகளை குடைந்து கொண்டார்கள் (எரே. 2 : 11—13).

மனிதன் இறைவனுடைய அன்பை ஏற்க மறுத்தாலும், அதனைக் கொடுப்பதற்கு இறைவன் மறக்கவில்லை. மனிதன் பாவ அடிமைத் தனத்தி—ருந்து விடுதலையடைய தம் ஒரே மைந்தனையே தந்தருளினார். “மனிதனைப் பாவத்தி—ருந்து விடுவிக்க வந்தவர்” இந்த பாடுபடும் பணியாளர் (ஏசா. 53 : 11). இறைவனின் மகனைத் தவிர வேறொருவர் இல்லை என்பதை திருமறை தெளிவுப்படுத்துகிறது. கொல்கதா மலை மேட்டில், சிலுவையில், கள்வர்கள் மத்தியில் அறையப்பட்ட கிறிஸ்துவாலே விடுதலை உருவானது. அந்த விடுதலையாளரைப் பின் தொடர ஆயத்தமாவோம்.

**2011**

**டிசம்பர்**

**13**

**செவ்வாய்**

காலை

சங். 107:28–43

தி. வ.
சங். 107 : 28

**“...அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார்”**

மாலை

லூக். 13:10–17

சிந்தனை

**தனிமையில் யாருமில்லை. இறைவன் துணை உண்டு.**

# இக்கட்டில் விடுதலை

காலைப் பொழுது புலர்ந்து மாலைப் பொழுது மறையும் வரை ஒவ்வொரு நாளும் பிரச்சனைகள் சூழ்ந்த உலகில் வாழ்ந்து வருகிறோம். ஏன் இந்த துன்பம்? இது மிகவும் பழமையான கேள்வி. எனக்கு மட்டும் ஏன் இவ்வளவு கஷ்டம்? இது எல்லாருக்கும் எழும் கேள்வி. இக்கட்டுகளை அனுபவிக்க யாரும் விரும்புவதில்லை. ஆனால் துன்பமில்லாமல் வாழ்வுமில்லை. பாவம் செய்தவர்கள்தான் துன்பப்படுகிறார்கள் என்ற நிலையும் மனிதனிடம் உண்டு. அப்படியானால் நல்லவர்கள், நீதிமான்கள் ஏன் கஷ்டப்படுகிறார்கள்? என்றக் கேள்வி வலுவடைகிறது.

யோபு நல்லவர், கடவுள் பற்றுடையவர், தீமையை வெறுத்தவர், நீதிமானாக இருந்தவர். யோபு தான் பெற்றிருந்த எல்லாவற்றையும் இழந்தார். பிள்ளைகளையும் இழந்தார். ஆறுதல் சொல்ல நினைத்த நண்பர்களாலும் அது இயலாமற் போயிற்று. காரணம் யோபு அனுபவித்தது மாபெரும் துன்பம். கடவுள் ஏன் உண்மையுள்ளவர்களுக்கு தீமையை கொடுக்கிறார்? என்பது யோபுவின் கேள்வி. உன்னால் அறிந்து கொள்ள முடியாத காரியங்களைக் குறித்து நீ ஏன் பேசுகிறாய்? என்ற கேள்வியே கடவுளிடமிருந்து கிடைத்தது.

உலகம் பெரியது, கடவுள் மிகப் பெரியவர். அவரது செயல்கள் நாம் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருக்கிறது. நமது அறிவு குறுகியது. நம் அறிவால் அவற்றைப் புரிந்து கொள்ள முடியாது என்பதை யோபு உணர்ந்தார். நண்பர்களுக்காக வேண்டிக்கொண்டபோது முன்பு தான் இழந்தவைகளை எல்லாம் மீண்டும் பெற்றார்.

தங்கத்தை நெருப்பு புடம் போட்டு சுத்தப்படுத்துவது போல் துன்பம் நம் மனதைத் தூய்மைப்படுத்த உதவும். கடவுளிடம் நெருங்கிப்போகத் துணைபுரியும். நம் ஆண்டவர் இயேசு ஆபத்துக் காலங்களில் துணைபுரிபவராகவும், வெற்றிகளைத் தருவதில் துணையாகவும், விடுதலையளிப்பவராகவும் திருமறை நமக்கு கற்றுத் தருகிறது. விடுதலை பெற இறைவனின் துணை தேடி வாழ்வோம்.



**2011**

**டிசம்பர்**

**14**

**புதன்**

காலை

யாத். 6 : 1–8

தி. வ.
யாத். 6 : 6, 7

**“...நான் உங்களை விடுவித்து அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி ...உங்கள் தேவனாயிருப்பேன்”**

மாலை

யோவா. 8:31–36

சிந்தனை

**விடுதலை வேட்கையே விடுதலைக்கு இட்டுச் செல்லும்.**

# அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

விடுதலை நோக்கி பயணம் மேற்கொள்ள அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற வேண்டும் என்ற வேட்கை அவசியமாகிறது. “என்று தணியும் இந்த சுதந்திர தாகம் என்று மடியும் இந்த அடிமையின் மோகம்” என்ற பாரதியின் கூற்று இதனையே எதிரொ—க்கிறது. ஒரு பெரிய சமூகத்தில் அல்லது இனத்தில் விடுதலை தாகம் உருவாவது சாதாரணக் காரியமல்ல. அன்னிய நாட்டில் அன்னியர் ஆட்சியின் கீழ் மக்கள் ஒடுக்கப்படுவது, துன்புறுத்தப்படுவது, உரிமைகள் பறிக்கப்படுவது போன்ற நிகழ்வுகள் இந்த விடுதலை வேட்கைக்கு அடித்தளமிடுகிறது.

இஸ்ரயேல் இனத்தார் எகிப்தி—ருந்து விடுதலைப் பெற்று கடவுளால் வாக்களிக்கப்பட்ட கானான் தேசம் சென்று, தங்களுக்கென்று ஒரு நாடு, ஒரு அரசு, சட்டம், சமுதய நெறிமுறைகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினர். சுமார் 430 ஆண்டுகளாக இஸ்ரயேலர் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தனர். பலுகிப் பெருகி நாட்டையே நிரப்பினர். அடக்கு முறைகளுக்கு ஆளாயினர். நாளடையில் மாபெரும் பலமுள்ள எதிர் சக்தியாக மாறக்கூடும் என மன்னன் அஞ்சி அடக்கி ஆண்டு வந்தான். இதனால் மக்கள் இறைவனிடம் தங்கள் துன்பங்களைச் சொல்— அழுதனர். இறைவன் அவர்களுடைய கூக்குரலைக் கேட்டார் (யாத். 3: 7, 8). தன் ஜனத்தை விடுவித்து வாக்களித்த நாட்டைக் கொடுக்க மோசே அரண்மனையிலும், பாலைநிலத்திலும் பயிற்சி அளிக்கப்பட்டு அழைக்கப்படுகிறான். முட்புதர் அனுபவம் இதனை அவர் உணரவும் வழி வகுக்கின்றது.

இறைவன் மனிதனை மீட்க மனிதனையே கருவியாக பயன்படுத்துகிறார். இஸ்ரயேல் மக்களை விடுவிக்க மோசேயைப் பயன்படுத்தினார். கிறிஸ்தவ மீட்பின் முன்னோட்டமாக இருந்தது இஸ்ரயேலரின் விடுதலை. இயேசுவின் பணியும் சிறைப்பட்டோருக்கு விடுதலை, ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு என்பதை நோக்கமாகக் கொண்டது. இன்றைய சமுதாயத்திலும் அடிமைத்தனம், விடுதலை வேட்கை ஒரு தொடர்கதையாகவே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. விடுதலை அனைவருக்கும் சொந்தமாக நாமே கருவியாக செயல்படுவோம்.

## இருளிலிருந்து விடுதலை

**2011**
**டிசம்பர்**
**15**
**வியாழன்**

காலை
லூக். 1:67–79

தி. வ.
லூக். 1:78–79

**“அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும்...அருணோதயம் நம்மை சந்தித்திருக்கிறது”**

மாலை
யோபு 29:1–6

சிந்தனை
**ஒளி பெற்றோம் இயேசுவால், ஒளி வீசுவோம் அவருக்காய்.**

ஒளியின்மை இருளாகும். இருளானது குழப்பத்தின் ஆக்கக் கூறாகும். ஆகவே அது நீரழிவு, தீமை ஆகியவற்றின் மொத்த உருவாக கொள்ளலாம். ஏசாயா தீர்க்கன் உரையின்படி, “இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்” (ஏசா. 9 : 2). உண்மையாகவே இருளை அகற்றுவது ஒளியே. நாசரேத் பட்டணத்தை ஊர் ஊராகச் சுற்றி வந்த இயேசு “நானே உலகின் ஒளி” என்று உறுதியாகக் கூறினார். ரோமப் பேரரசில் முதல் நூற்றாண்டில் மனிதனுடைய நம்பமுடியாத கூற்றாக இது அமைந்தது. ஏனென்றால் மக்கள், மிகவும் அடிமைத்தன நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தனர். ரோம ஆட்சியாளர்களால் அதிகம் ஒடுக்கப்பட்டு, இரும்புக் கரத்தால் நசுக்கப்பட்டனர். சமயத் தலைவர்களாலும், சட்ட வல்லுனர்களாலும் மக்கள் அடிமை நிலையான வாழ்வுக்கு தள்ளப்பட்டிருந்தனர். நிச்சயமாகவே இந்த வாழ்வு இருள் நிறைந்ததே. இச்சூழ—ல் இயேசுவின் பிறப்பும் அவரது வார்த்தைகளும் சக்தி வாய்ந்த சத்தியமாகியது. ஒழுங்குபடுத்திய வார்த்தை இருள்நிறைந்த உலகில் ஒளியினை உருவாக்கியது எனலாம்.

“அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளிக்கு நேராய் வரவழைத்தவர்” என்று பேதுரு சாட்சியிடுகிறார் (1 பேதுரு 2 : 9) இருளி—ருந்து ஆச்சரியமான ஒளிக்கு நேராய் இட்டுச்செல்லும் அருணோதயம் நம்மை சந்திக்கிற காரணத்தால் மனிதர் வாழ்வுகள் ஒளியேற்றம் பெற்றுள்ளன.

மரணப் படுக்கையில் காணப்பட்ட கௌதம புத்தரை சுற்றி கண்ணீருடன் சீடர்கள் “நீரே எம் ஒளி, நீரில்லாத வாழ்வு எங்களுக்கு இருட்டுதான்” என்றனர். சீடருக்கு புத்தரின் இறுதி வார்த்தைகள் “இருட்டு என்று கலங்காதீர்கள்”. நீங்களே விளக்காக மாறுங்கள். ஒளியாயினர் சீடர்கள்.

நாம் இன்று மூட நம்பிக்கைகள், தவறான நடைமுறைகள், அறியாமை, பாரம்பரியங்கள் போன்ற இருளி—ருந்து வெளியே வர இயேசு என்னும் ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இருள் நிறைந்த வாழ்வி—ருந்து வெளி வருவோம். ஒளி கொடுப்போம்.



## தீயோனிடமிருந்து விடுதலை

**2011**
**டிசம்பர்**
**16**
**வெள்ளி**

காலை
சங். 91

தி. வ.
சங். 91 : 3

**“அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும் ...தப்புவிப்பார்”**

மாலை
மாற். 5:1–20

சிந்தனை
**இறைவன் முன் தீமை – ஆதவனைக் கண்ட பனி போல் மறையும்.**

நிலத்தில் புல் படர்ந்திருப்பது போல உலகில் தீமையும் நிறைந்துள்ளது. தியோன் தலைவனாயிருக்கிறான். கேடு, பழி, பாவம், குறை, தவறு போன்றவை தீமை எனப் பொருள் கொள்ளப்படும். மனிதன் தான் தீமைக்கு காரணம். தீமை மனித இதயத்தி—ருந்து எண்ணமாக வெளிவந்து செயல்வடிவம் பெறுகிறது (மாற்கு 7 : 21). மனித உள்ளத்தி—ருந்த எழும் தனி மனிதத் தீமைகள், உடல்நலத் தீமைகள், சாயமடித்து வரும் சமயத் தீமைகள், பாரில் பவனி வரும் பாசமிகு தீமைகள், படித்தவர்கள் புரியும் பண்பில்லாத் தீமைகள் எனப் பல பரிமாணங்களில் திமை இவ்வுலகில் பரவியுள்ளது.

தீமை செய்வோர் அதை உணரும் நிலையை மறுக்கின்றனர். ஆதாம் தான் செய்த குற்றத்தை ஏவாள் மீது சுமத்துகிறான். ஏவாள் பாம்பின் மீது சுமத்துகிறாள். பசி வந்தால் பத்தும் பறந்து போவது போல நிலைவாழ்வை மறந்து இக வாழ்வில் தாகம் கொண்டவனாய் மனிதன் தீயோனிடம் எளிதில் சிக்கிவிடுகிறான். தீமைகளின் தீமையை எண்ணிய இயேசு, தீமையி—ருந்து விடுபட ஜெபிக்கச் சொன்னார். ஏனெனில், சகலவித தீய சக்திகளி—ருந்தும் மனிதரைக் காப்பாற்ற அவர் வந்து சக்தியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இதுவே உண்மை. இந்த உண்மையை புரிந்தோர் வாழ்வில் எவ்வளவு முறை வீழ்ந்தாலும் தூக்கிவிட காத்திருக்கும் துணைகரத்தினை துரிதமாய் பிடிக்க ஆவல் கொள்வர்.

தாவீது அரசர் நெருக்கடியான வேளையில் நான் ஆண்டவரை நோக்கி மன்றாடினேன். ஆண்டவரும் எனக்கு செவி கொடுத்து என்னை விடுவித்தார் (சங். 118 : 5) என்றார். தீங்கு அனைத்தி—ருந்தும் என்னை விடுவித்துத் தம் விண்ணரசில் சேர்த்து எனக்கு மீட்பளிப்பார் (2 தீமோ. 4 : 18). இங்கு விடுதலை கனியாகிறது. இறைவனால் மீட்கப்பட்ட இதயத்தில் புதிய படைப்பின் வித்து விழுகிறது. அதில் தீமை என்பதே இராது. தீயோனுக்கு இடம்கொடாமல் தீமை இல்லா உலகை உருவாக்குவோம்.

**2011**

**டிசம்பர்**

**17**

**சனி**

காலை

ஏசா. 14:1–8

தி. வ.
ஏசா. 14 : 2

**“...இஸ்ரவேல் சம்சத்தார்.... தங்களை சிறையாக்கினவர்களை சிறையாக்கி, தங்களை ஒடுக்கினவர்களை ஆளுவார்கள்”**

மாலை

2கொரி.11:16–33

சிந்தனை

**சிறையிருப்பி – ருந்து சீர்திருத்தம் பெறவே – சிலுவை**

மன்னா சேர்ப்போம்

# சிறைப்பட்டோருக்கு விடுதலை

உலகின் எந்த ஒரு வரலாற்றைப் புரட்டினாலும் எந்த சமய நூல்களை நோக்கினும் அங்கே மீட்பைப் பற்றிய பாரம்பரிய செய்திகளைக் காணலாம். ஆனால் மெசியாவைப் பற்றி இஸ்ரயேலரின் வரலாற்றில் மட்டும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டது. இறைவன் இஸ்ரயேல் மக்களுக்கு ஏராளம் நன்மைகள் செய்திருந்தும் காலப்போக்கில் அவர்கள் பிற தெய்வங்களை வழிபடலாயினர். இறைவனின் கற்பனைகளை மீறி துரோகம் செய்தனர். இந்நிலையில் இறைவன் அவ்வப்போது இறைவாக்கினரை அனுப்பி வரப்போகும் தீர்ப்புத் தண்டனையை முன்னறிவித்தார்.

இஸ்ராயேலரின் அழிவு காலம் வந்தது. அரசு இரண்டாகப் பிளவுப்பட்டு வடப்பகுதி இஸ்ரயேல் என்றும், தென்பகுதி யூதா என்றும் இரு சிறிய அரசுகளாயின. மேலும் இவர்கள் ஒன்றோடொன்று போர் புரிந்து பகைவரின் படையெடுப்புக்கும் ஆதிக்கத்திற்கும் ஆளாயினர். வரபோகிற மேசியாவைப் பற்றிய ஆர்வம் குன்றிவிட்டது. அவர்களின் இருதயம் பிற தெய்வங்களை நாடிச் சென்றது. பிற நாட்டு அஞ்ஞான அரசர்களுடன் உறவு கொண்டனர். இஸ்ரயேலரின் வரலாறு கறைப்பட்டுவிட்டது. ஆகவே இறைவனின் மக்களாகிய உடன்படிக்கையின் மக்கள் நாடுகடத்தப்பட்டு, சுதந்தர வாழ்வை இழந்து சிறையிருப்புக்கு தங்களை உட்படுத்திக் கொண்டனர். பல துயரங்கள், எண்ணற்ற துன்பங்கள் சேர்ந்தது. தாங்க முடியாத வரிப்பழு அவர்களை நெருங்கியது. அவர்கள் அனுபவித்த துன்பங்கள், பாவத்தின் தண்டனையாகவும் இறைவன் அருளப்போகும் விடுதலைக்கு முன் அடையாளமாகவும் இருந்தன. இறைவன் அவர்களை மீண்டும் ஒருங்கிணைப்பார் என்ற நம்பிக்கை உருவாகியது. நம்பிக்கையின் விளக்கு தூண்டப்பட்டு மீண்டும் எரிந்தது.

குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் என்ற அருள்மொழிக்கிணங்க, தீய சக்திகளில் சிக்குண்டு சிறையுண்டிருக்கும் மனிதனுக்கு விடுதலையருளும் கிறிஸ்து இயேசுவின் கரங்களில் நம்மை அர்ப்பணிப்போம்.



**2011**

**டிசம்பர்**

**18**

**ஞாயிறு**

**சிறுபான்மையினர் உரிமை நாள்**

காலை

சக. 2 : 10–13

தி. வ.
சக. 2 : 10

**“...இதோ நான் வந்து உன் நடுவில் வாசம் பண்ணுவேன்”**

மாலை

பி–. 4:4–9

சிந்தனை

**இறைவனின் மீட்புத் திட்டம் – திருமறை**

மன்னா சேர்ப்போம்

# அக்களிப்போம் ஆண்டவர் அருகில்

இறைவன் ஒன்றுமில்லாமையினின்று உலகைத் தம் வார்த்தையால் உண்டாக்கினார். அவருடைய படைப்பின் சிறப்பாக முதல் மனிதர்களான ஆதாம், ஏவாள் இருவரையும் தமது சாயலாகவும் உருவாக்கி பரிசுத்தமும் பாக்கியமான நிலையில் வைத்தார் (ஆதி. 3 : 15). அவர்கள் இவ்வுலகிலேயே நம்மோடு நெருங்கிய ஒன்றிப்பில் வாழவேண்டுமென இறைவன் விரும்பினார். அவர்கள் தம் தன்மையையும் மேன்மையையும் உலகில் பிரதிப—க்க வேண்டும். தம் அன்பைப் பெறவும் தமக்கு அன்பு செய்யவும், தம்முடனும் பிறனுடனும் உண்மையான உறவுக் கொண்டிருக்கவும் விரும்பினார். இவ்வாறாக நிலையான ஒரு வாழ்வு திட்டத்தை அவர்களில் வைத்திருந்தார். அவர்கள் அந்த பேரின்ப வாழ்வைப் பெற இறைவன் சித்தமறிந்து, நன்மையைத் தேர்வு செய்யவும், தீமையை விலக்கவும் முழு சுதந்தரத்தைப் பெற்றிருந்தனர்.

ஆனால் அவர்கள் நன்மையை அல்ல. தீமையை தெரிந்துகொண்டனர். இறைவனை ஏற்றுக்கொள்ளவும் அன்பு செய்யவும் மறுத்தனர். அவர் தந்த சட்டத்தை மீறி, கீழ்ப்படியாமை என்ற பாவச் செயலைப் புரிந்தனர். இதனால் இறைவனின் நன்மைக் கொடைகளை இழந்தனர். இறைவனை விட்டு பிரிந்தவர்களாக வாழ்ந்தனர்.

இறைவன் அவர்களைத் தம்மிடம் மீண்டும் கொண்டு வருவதற்காக மீட்பர் ஒருவரை அனுப்புவதாக வாக்குறுதி அளித்தார். இதனால் பாவ நிலையி—ருந்தவர்களுக்கு நம்பிக்கை உண்டாயிற்று, மீட்பையும் பாவத்தின்மேல் வெற்றியையும் முன் அறிவித்தது. அந்த மீட்பர் மனித சந்ததியில் ஒரு பெண் வழியாக இவ்வுலகில் வருவார் என்ற வாக்குறுதி தலைமுறை தலைமுறையாக எங்கும் எதிரொ—த்துக் கொண்டிருந்தது.

இதோ நான் வந்து உன் நடுவில் வாசம் பண்ணுவேன் என்ற வாக்கு இறைவனையும் பாவ மனிதனையும் ஒரு பாலம் போல் இணைக்கும். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்ற இயேசு நாதரின் சாட்சி சொற்கள் கேட்டு உடனிருக்கும் இறைமக்கள் இறைவனில் மகிழ்ந்தனர். அந்த மீட்பைப் பெற்று நாமும் அக்களிப்போம்.

**2011**
**டிசம்பர்**
**19**
**திங்கள்**

காலை
ஏசா. 12:1–6

தி. வ.
ஏசா. 12 : 6
**"...இஸ்ரவே—ன் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்"**

மாலை
யோவா. 1:1–9

சிந்தனை
**கிறிஸ்துவின் இரத்தம் நம்மை அவரண்டை சேர்க்கவே!**



# அருகிலிருக்கும் மீட்பர்

கடவுள் வெகுதூரத்தி—ருப்பவர், அறியப்படாதவர், வருடமொருமுறை வருபவர், படையலை ஏற்க வருவார் என்பன போன்ற கருத்துக்கள் பல சமயங்களில் காணக்கிடக்கின்றன. விவி—யக் கண்ணோட்டத்தில் பழைய ஏற்பாட்டில் கடவுள் தூரத்தில் உள்ளார் (யாத். 24 : 1). உயரத்தில் வாசம் செய்பவர். போன்ற உண்மைகள் உள்ளன. அதே நேரம் மக்கள் கடவுளை மனமார பணிந்து கொள்ளும்போது அவர் சமீபமாயிருக்கிறார் என்ற உண்மையும் கூறப்பட்டுள்ளது (உபா. 4 : 7). புதிய ஏற்பாட்டில் இயேசு உயரத்தில் இருந்தவர், உலகில் நம்முடனிருக்க வந்தார். அறியப்படாதவர் அறியப்பட்டார் உன்னதத்தி—ருந்தவர் உடனிருக்கிறார் என்பதே. இதை மெய்ப்பிப்பதே "இம்மானுவேல்" என்று அவருக்குக் குறிக்கப்பட்ட பெயர்.

நம்மோடிருக்கும் இறைவனின் உடனிருத்தலை உணர்ந்த தாவீதரசன். ஆண்டவரே நீர் என் அருகி—ருக்கின்றீர் (சங். 119 : 151) என்று சான்று பகருகின்றார். அருகி—ருக்கும் கடவுளை வாழ்வில் அனுபவிக்க சில தருணங்கள் நமக்கு உதவுகின்றன.

i) உண்மையால் அவரை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு அவர் அருகி—ருக்கிறார். (சங். 145 : 18) அவரை உரத்த சத்தமாய் அழைக்கிறபோது இன்னமும் அருகில் வருகிறதை நாம் உணர முடியும் (Ex. எசேக்கியா ராஜா — 2 இரா. 20 : 1—6).

ii) உடைந்த உள்ளம் கொண்டோர்க்கு அருகில் அவர் உள்ளார். (சங். 34 : 18) பாவ உணர்வினால் இருதயம் குத்தப்பட்டவர்களாய், இனிமேல் என்ன என் வாழ்வு? என்று சுக்கு நூறாய் உடைந்த உள்ளம் கொண்டோரின் கண்ணீருக்கு ஆண்டவர் ஒருபோதும் தூரமானவரல்ல.

iii) மனந்திரும்புகிற யாவருக்கும் ஆண்டவர் அருகி—ருக்கிறார். (லூக். 15 : 20) தகப்பனை விட்டு வெகு தூரம் சென்ற மகன் மனம் மாறி வந்தபோது அன்போடு அணைத்துக் கொண்ட தந்தையாய் அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அருகி—ருக்கும் ஆண்டவரை உள்ளத்தில் ஏற்று மீட்படைவோம்.



**2011**
**டிசம்பர்**
**20**
**செவ்வாய்**

காலை
மத். 2:1–11

தி. வ.
மத். 2 : 10
**"அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்ட போது மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்"**

மாலை
ஏசா. 9:1–5

சிந்தனை
**ஆயத்தமாகப்பட்ட உள்ளங்களில் மீட்பரின் ஆனந்தம் உண்டு.**



# அகமகிழ்விக்கும் மீட்பர்

மகிழ்ச்சி என்பது மனிதனாகப் பிறந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் சொந்தமானது. எல்லாச் சூழ்நிலையிலும் மனித வாழ்வின் இலக்கு மகிழ்ச்சியே. அனைவரும் அதைத் தேடுகிறார்கள். அதை கண்டுபிடிக்க மக்கள் பல வழிகளையும் கையாளுகிறார்கள். இந்நிலையில் நாம் அனுபவிக்கும் சந்தோஷத்தை மூன்று நிலைகளில் உணரலாம் என அறிஞர்கள் கூறுகிறார்கள். (1) களிப்பு (2) மகிழ்ச்சி (3) ஆனந்தம். இதில் களிப்பு உடல் ரீதியானது. மகிழ்ச்சி மனம் சம்பந்தப்பட்டது. ஆனந்தம் ஆன்ம ரீதியானது. களிப்புக்கும் மகிழ்ச்சிக்கும் எல்லை உண்டு. ஆனால் ஆன்ம ரீதியான ஆனந்தத்திற்கு எல்லை இல்லை. இத்தகைய சந்தோசத்தை கிழக்கிலே கண்ட நட்சத்திரத்தின் வழியாக வானவியல் அறிஞர்கள் அனுபவித்தார்கள்.

ஒரு மீட்பருக்காக உலகெல்லாம் எதிர்பார்த்திருந்த காலம். மீட்பர் என் வயிற்றில் தோன்றுவாரோ என்று பெண்களெல்லாம் தங்களைத் தூய்மையுடன் ஆயத்தப்படுத்திக் காத்திருந்த நாட்கள். இறைவாக்கினர்கள் அறிவித்தபடி இஸ்ரயேல் மக்கள் மீட்பராகிய மெசியாவின் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தனர். காலம் நிறைவேற்றியபோது, இறைமக்களின் நம்பிக்கையை நிறைவாக்க இவ்வுலகில் வந்தார். மானிடருக்காகவும் அவர்களின் மீட்புக்காகவும் வானகமிருந்து இறங்கி மனிதன் ஆனார். மனிதனுக்கு பதிலாக கடவுளின் துன்புறும் பணியாளனாய் பாவ நிவாரணத்திற்காக பிராயச்சித்த ப—யாகப் போகிற நட்சத்திரம் ஒன்று தோன்றிவிட்டது என்பதைக் கண்ட மேய்ப்பர்களின் காட்சிகள் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றது.

உலக வரலாறுகள் எதிலும் இல்லாத ஒரு நிகழ்வு மகிழ்ச்சி தரும் மீட்பர் சாதாரண மக்களுடனிருப்பதே. விண்தூதரும் மண்ணில் மகிழ்ச்சிப் பெருக்கெடுக்கும் என்று வாழ்த்தினர். யாரும் எதிர்பாராத செயல் நடந்தபோது எங்கும் பரபரப்பும் ஆனந்தமும் உண்டானது. நம் அகங்களிலும் மீட்பர் பிறந்து ஆனந்தம் பெற ஆயத்தமாவோம்.

# அமைதியருளும் மீட்பர்

**2011**
**டிசம்பர்**
**21**
**புதன்**

காலை
ஏசா. 9:6–10

தி. வ.
ஏசா. 9 : 7
**"...கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை"**

மாலை
யோ. 14:22–27

சிந்தனை
**அமைதி நிலை – கடவுளுடைய ஆட்சி நிலை.**



சிதைந்த ஓர் உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இறைவன் விரும்பிய அமைதி நிறைந்த உலகம் பல அடக்கு முறைகளினூடே மெதுவாக பரிணாமித்துக் கொண்டிருக்கிறது. மனிதன் அமைதியைத் தேடி ஒவ்வொரு நாளும் அலைந்து திரிகிறான். அதைப்பெற மனிதன் பின்பற்றும் வழிகள் ஆண்டவருடைய வழிகள் அல்ல என்பதை அறியாது போகிறான். மெய் சமாதானம் இயேசுவில் எப்படி கிடைக்கப் பெறுகிறது என்பதையும் விவி—யத்தில் கண்டறிந்து கொள்ள வேண்டும். அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன் (யோ. 14 : 27) என்றுரைத்த இயேசுநாதர் அமைதி விரும்புவோர் வாழ்வில் அதை அனுபவிக்கச் செய்கிறார்.

அமைதியை விரும்பாதோர் இவ்வுலகில் யாருமில்லை. இன்றைய சூழ—ல் எங்கு நோக்கினும் பயங்கரவாதமும், இனப்படுகொலை, உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலையும் நம்மைச் சூழ்ந்திருக்கிறது. வன்முறை தாக்கம் நிறைந்த இந்நாட்களில் அமைதியை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டு உலகப் போர்களால் பூமி உருண்டை சிதைக்கப்பட்ட பின்பு, அமைதியை நிலைநாட்டும் கருவியாய் "பன்னாட்டு நிறுவனம்" (UNO) நிறுவப்பட்டது. இவ்வாறு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அவை சரியானதா? என்றால் "இல்லை" என்ற பதிலே கிடைக்கிறது.

ஆண்டவர் அருளுகிற அமைதியை வாழ்வை அனுபவிக்க இயலாதவாறு இன்று மனுக்குலமும் நல்லுறவின்றி தவித்துக்கொண்டிருக்கிறது. அமைதி ஏற்படப் பாடுபடுவோர்க்கு நோபல் பரிசு ஆண்டுதோறும் வழங்குகின்றனர். நம்மால் இவைபோன்ற பரிசுகளை வெல்ல முடியாதது தான். ஆனால், நம் வாழ்விலே ஒருவரை ஒருவர் வாழ்த்த, விசாரிக்க இணைந்து பேசி மகிழ, மகிழ்ச்சியான அனுபவங்களைப் பகிர என எத்தனையோ வாய்ப்புகள் உண்டு. அமைதியின் கடவுள் தந்திருக்கின்ற இத்தருணங்களை பயன்படுத்தி வாழ்வில் அமைதியை சுவைத்திடுவோம். பிறர் வாழ்வில் அமைதி நிலவ பாடுபடுவோம்.



# அருள் வழங்கும் மீட்பர்

**2011**
**டிசம்பர்**
**22**
**வியாழன்**

காலை
யோ. 1:12–23

தி. வ.
யோவா. 1 : 17
**"...கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின"**

மாலை
சங். 25:1–10

சிந்தனை
**இறைவனிடம் செல்ல தகுதியற்றவனை தகுதிப்படுத்துவது இறையருள்.**



நமது அருள் நாதர் இயேசுகிறிஸ்து கிருபை அளிப்பவர் கிருபை என்பதற்கு தமிழ்ச் சொல் "அருள்" என்பதாகும். தயவு, இரக்கம் போன்ற சொற்களும் கிருபை என்பதின் உள்பொருளை உணர்த்துவதாக உள்ளது. நாமெல்லாரும் தகுதியற்றவர்களாக இருந்தும் பாவத்தி—ருந்து மீட்கப்பட்டு விடுதலை வாழ்வு வாழ, கடவுளிடமிருந்து வந்த கிருபை நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்டது. எனவே தான் யோவான் 1 : 17—இல் கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின என்று சொல்லப்பட்டுள்ளது. எபிரேயர் 4 : 15—16 வசனம் நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். எனவே இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம் என்று நம்மை தைரியப்படுத்துகிறது.

யோவான் 8—ஆம் அதிகாரத்தில் பார்க்கும் பொழுது விபசாரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் கொண்டு வந்து நிறுத்தி அவளுக்கு என்ன தண்டனை கொடுப்பார் என்று அவரிடம் கேட்டுக்கொண்டிருந்தார். இயேசுவோ அமைதியாக உங்களில் பாவமில்லாதவன் இவன் மேல் முதலாவது கல்லெறியக் கடவன் என்று கூறினார். அவளைக் குற்றம் சாட்டிய மனிதரெல்லாரும் தங்கள் மனதில் குத்துண்டவர்களாகி சென்றுவிட்டனர். இயேசு ஒருவர் மட்டும் தனித்திருந்தார். ஒருவராகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கவில்லையா? நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை என்று கூறி அவர் மேலும் திருந்தி வாழ அருள் வழங்குகிறார். அதோடு இனி பாவம் செய்யாதே என்ற அன்பு கட்டளையையும் கொடுத்தனுப்புகிறார்.

நாம் அறிந்தோ அறியாமலோ தவறுசெய்யும் போது மன்னித்து மீண்டும் திருந்தி வாழ தமது அருளினால் தருணம் தருகிறார். எனவே அருள் வழங்கும் மீட்பரிடம் சேர்வோம்; இரக்கத்தைப் பெறுவோம்.

## அன்பு கூரும் மீட்பர்

**2011**
**டிசம்பர்**
**23**
**வெள்ளி**

காலை
யோ. 3:16–21

தி. வ.
யோவா. 3 : 16
**"...அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"**

மாலை
ஏசா. 26:1–9

சிந்தனை
**அன்பு அனைத்தையும் ஏற்கும்.**

அவன் ஒரு ரிக்ஷா தொழிலாளி, அவனது வருமானம் மிகவும் சிறியது. ஆனால், அவன் குடும்பமோ மிகவும் பெரியது. உழைத்து ஓடாகின்றான். எனினும் குடும்பத்தைக் காப்பாற்ற முடியவில்லை. எனவே, தன் இரத்தத்தை விற்கிறான். உடம்பில் இருந்த இரத்தமெல்லாம் வற்றிப் போக படுத்தப்படுக்கை ஆகின்றான். மரணப் படுக்கையில் கிடந்தவாறே தன் எலும்புகளையும் விலை பேசுகின்றான். எலும்பு வியாபாரிகள் கொடுத்தப் பணத்தை வாங்கி தன் குடும்பத்தைக் காப்பாற்றுகிறான். அவன் இறந்த பிறகே அவனது, தியாகம் வெளி உலகிற்குத் தெரிய வருகிறது. இது நம் தங்கத் திருநாட்டிலே கொல்கொத்தா நகரில் நடந்த நிகழ்வு! இதை அன்பு என்போமா? இல்லை, தியாகம் என்போமா? என்னவென்று சொல்வோம்!

அன்பு என்றால் தியாகம்! தியாகம் என்றால் அன்பு! தியாகம் இல்லை என்றால் அன்பு இல்லை! அன்பு இல்லை என்றால் தியாகம் இல்லை! அன்பு எல்லாவற்றையும் கொடுக்கின்றது. எல்லாவற்றையும் இழக்கின்றது. இன்றையத் திருமறைப்பகுதி சுட்டிக்காட்டும் உண்மை இதுவே. இறைவனை நம்பும் மக்களின் வாழ்வு சிதைந்து போகாதபடி அவர்களை மீட்க தம் ஒரே மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்.

அன்புக்கு மறுபெயர் தியாகம்! தியாகத்திற்கு மறுபெயர் இயேசு! சிலுவையே சாட்சி! தனக்காக தன் சுயநலத்திற்காகப் பிறரைப் ப— கொடுக்கிறான் மனிதன். ஆனால், ஆண்டவரோ பிறருக்காக, பிறர் வாழ்வுக்காகத் தம்மையேப் ப—யாக்குகிறார். தியாகத்தின் மகுடம், தியாகத்தின் சிகரம், விளக்க வார்த்தையே இல்லை. அந்தத் தியாகத்தை, தூய்மையான அன்பை, இறை அன்பை நமது அன்றாட வாழ்வில் நாம் பிரதிப—க்கின்றோமா? அவரைப் போல நாம் பிறர் மீது அன்பு செய்கின்றோமா? பிறருக்காக பிறர் நலனுக்காக, பிறர் வாழ்வுக்காக நாம் தியாகங்கள் செய்கிறோமா?

ஆம்! அன்பு கொடுக்கிறது!
அன்பு தியாகம் செய்கிறது!!



## அச்சம் அகற்றும் மீட்பர்

**2011**
**டிசம்பர்**
**24**
**சனி**

காலை
லூக். 2:1–14

தி. வ.
லூக். 2 : 10
**"பயப்படாதிருங்கள்"**

மாலை
சங். 89:1–4, 19–29

சிந்தனை
**இறைவனை நாடி அச்சம் களைவோம்.**

இன்று மனிதனை ஆட்டிப் படைக்கும் மிகக் கொடிய நோய் பயம்! பயம் என்பது சாதாரண நோய் அல்ல, கொல்லும் கொடிய நோய்! அது ஒரு பயங்கரமான மனநோய் என்கிறார் கோர்டன் பவ்வல் (Gorden Powell) என்னும் உளவியல் அறிஞர். பயப்படாத மனிதனே இல்லை! சிலருக்கு இருட்டைப் பார்த்தால் பயம். சிலருக்கு ஒளியைப் பார்த்தால் பயம். சிலருக்கு விலங்குகளைப் பார்த்தால் பயம். மாவீரன் நெப்போ—யனுக்குப் பூனையைப் பார்த்தால் பயமாம். இப்பொழுதெல்லாம் ஒரே பிரசவத்தில் இரட்டைக் குழந்தைகளோ அல்லது இரண்டிற்கு மேற்பட்டக் குழந்தைகளோ பிறப்பது சர்வசாதாரணமாகிவிட்டது. காரணம் "குழந்தைகள் கூட தனியாக இவ்வுலகிற்கு வரப் பயப்படுகிறார்கள்" என்றார் ஒருவர் வேடிக்கையாக.

"அஞ்சாதீர்"— இது கிறிஸ்து பிறப்பின் முதல் செய்தி. அஞ்சி நடுநடுங்கிய இடையர்களுக்கு வான் தூதர்கள் அறிவித்தச் செய்தி! நம்பிக்கை ஊட்டும் நற்செய்தி இதுவே (லூக். 2 : 10). கிறிஸ்து பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனால் இறை தூதனால் சொல்லப்பட்ட மகிழ்ச்சியின் நற்செய்தி மட்டும் நின்று மக்கள் உள்ளங்களில் மகிழ்வைத் தந்து கொண்டிருக்கின்றது. அனைத்து மக்களின் அச்சத்தை அகற்றி, மீட்பின் செய்தியாய் ஒ—த்துக்கொண்டிருக்கிறது.

"பயம்" என்பதற்கு எதிர்ச்சொல் "அபயம்" பொதுவாக எதிர்ச்சொல் எதிர் மறையான அர்த்தமே கொடுக்கும். எ.கா. நீதி அநீதி, நியாயம் அநியாயம், தர்மம் அதர்மம் போன்றச் சொற்கள் எதிர்மறையான அர்த்தங்களையேத் தருகின்றன. ஆனால், "அபயம்" என்பது, அழகுச் சொல்— அர்த்தமுள்ள சொல்! "அபயம்" என்றால் "அடைக்கலம் —தஞ்சம்— சரணாகதி (Surrender) அதாவது, இறைவா, நீயே கதி என அவரது திருக்கரங்களில் முழுமையாக ஒப்படைத்தல்! ஆம், பயம் அகற்றும் ஆண்டவரின் அரவணைக்கும் அன்புக் கரங்களில் சமூகமாக ஒப்படைப்போம். மீட்பரின் பிறப்பை மகிழ்வுடன் ஆசரிப்போம்.

**2011**
**டிசம்பர்**
**25**
**ஞாயிறு**
**கிறிஸ்து பிறப்பு**

காலை
மத். 1:18–25

தி. வ.
மத். 1 : 23
**"...இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோருக்கிறார் என்று அர்த்தமாம்"**

மாலை
ஏசா. 11:1–9

சிந்தனை
**இறைவன் நம்மோடிருப்பதால் ஆனந்த பரவசம் கொள்வோம்.**

மன்னா சேர்ப்போம்

# கடவுள் நம்மோடு

ஆகாசு அரசன் யூதா நாட்டின் கடவுளுக்கு அஞ்சி ஆட்சி புரிந்தான். அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த அவன் நாட்டில் திடீரென்று புயல் வீசியது. போர் மேகம் சூழ்ந்தது. சீரியா நாட்டு அரசன் இரட்சிப்பின் இஸ்ரயேல் நாட்டு அரசன் பெக்கா இருவரும் இணைந்து யூதா நாட்டுக்கு எதிராகப் போர் தொடுத்தனர். இருநாட்டு மன்னர்களின் கூட்டுச் சதியால் அரசன் ஆகாசும் அவன் நாட்டு மக்களும் "பெருங்காற்றினால் காட்டு மரங்கள் அலையதிர்வு கொள்வதுபோல்" கதி கலங்கினர். உடனே ஆண்டவர் இறைவாக்கினர் ஏசாவை ஆகாசிடம் அனுப்பித் தமது வார்த்தையை முழங்குகிறார். நீ அமைதியாய் இரு, அஞ்சாதிருந்து நடப்பனவற்றை உற்றுப் பார்.. மனங்கலங்காதே. அவர்கள் புகைந்து கொண்டிருக்கும் இரு கொள்ளிக்கட்டைகளி—ருந்து வரும் புகை போன்றவர்கள்... நிலைகுலைந்து நின்ற மன்னனை மேலும் ஆற்றல் படுத்துகின்றார் இறைவன். அடையாளம் ஒன்றைக் கொடுக்கிறார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த கன்னிகை ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள்; அக்குழந்தைக்கு "இம்மானுவேல்" என்று பெயரிடுவாள். நம்பிக்கையையும், துணிச்சலையும் ஊட்டுகின்ற அடையாளம்.

இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்பது பொருள் (மத். 1 : 23). கிறிஸ்து பிறப்பின் மையச் செய்தியே இதுதானே? ஆம், எல்லாம் வல்ல இறைவன் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் சார்பில் நிற்கிறார். அவர் என்னோடு இருக்கும்போது நான் எதற்கு அஞ்சவேண்டும்? யாருக்கு அஞ்சவேண்டும்? உம் துணையுடன் எப்படையையும் நசுக்குவேன் என்று ஆர்ப்பரிக்கின்றார் தாவீது பேரரசர் (தி.பா. 18 : 29). எனவே,

அகமகிழ்வோம்! அக்களிப்போம்!
ஆனந்தப் பரவசம் கொள்வோம்! ஏன்?
ஆண்டவர் நம்மோடு இருக்கிறார்!
நமக்காக இருக்கிறார்! நம் சார்பில் நிற்கிறார்!!
உடனிருப்பவரை உணர்ந்திடுவோம்.
உண்மையாய் சான்று பகர்ந்திடுவோம்.



**2011**
**டிசம்பர்**
**26**
**திங்கள்**

காலை
சங். 85:8–13

தி. வ.
சங். 85 : 13
**"நீதி அவருக்கு முன்னாகச் சென்று அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தும்"**

மாலை
ரோ. 3:19–26

சிந்தனை
**நீதி செய்பவர் நித்தியத்தில் நம்மை நடத்துவார்.**

மன்னா சேர்ப்போம்

# நீதி செய்பவர்

ஒருநாள் பேதுருவும் சாத்தானும் சதுரங்கம் ஆடிக்கொண்டிருந்தனர். பேதுரு சாத்தானைப் பார்த்து,புகழ்பெற்றச் சதுரங்க வீரர்கள் எல்லோரும் பரலோகத்தில் தானே இருக்கிறார்கள் எனவே எனக்குத்தான் "வெற்றி" என்றாராம்.. அதற்குச் சாத்தான் புகழ் பெற்ற வீரர்கள் வேண்டுமானால் உம்மிடம் இருக்கலாம்; ஆனால் வெற்றி—தோல்வியை அறிவிக்கும் நீதிபதிகள் நரகத்தில் தானே இருக்கின்றனர். எனவே வெற்றி எனக்கே! என்று மார்தட்டினானாம். இது ஓர் கற்பனைக்கதை என்றாலும் இன்றையப் பரிதாப நிலையை எத்தனை அற்புதமாக வெட்ட வெளிச்சமாக வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது அன்றோ! என்னே பரிதாபம் வே—யே பயிரை மேய்கின்றது நீதியை நிலைநாட்ட வேண்டிய நீதிபதிகளே பணத்திற்காக நீதியை விலைபேசுகின்றனர், வேதனையிலும் வேதனை.

ஆனால் இறைவனோ "சர்வலோக நியாதிபதி" "அனைத்துலகிற்கும் நீதி வழங்குபவர்" விசுவாசிகளின் தந்தை ஆபிரகாமின் நற்சான்றிதழ் (தொடக்கநூல் 18 : 25) நீதியும், நியாயமும் அவருக்கு இரண்டுகண்கள். நீதி அவருக்கு "அரைக்கச்சை" உண்மை அவருக்கு "இடைக்கச்சை" (ஏசாயா 11 : 5) அநீதி—அநியாயங்கள் தலைவிரித்து ஆடும்பொழுது தாங்கிக் கொள்ளவே மாட்டார் (யாத். 3 : 7; ஏசாயா 11 : 4) காணிக்கை என்ற பெயரில் ஏழை எளியவர்களை தலைமைக் குருக்கள் சுரண்டியபொழுது சவுக்கைத் தூக்கினார் இறைமகன் இயேசு (மாற்கு 11 : 15—18).

இப்பண்டிகைக் காலம் இறைமகனின் வருகையை நினைவூட்டும் காலம், ஆம், அவர் விரைந்து இம்மண்ணிற்கு வருகிறார். நியாயந்தீர்க்க வருகிறார், நீதி வழங்க வருகிறார் ஆட்சிபுரிய வருகிறார், அவர் ஆட்சியில், "நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நதியைப் போலவும்" புரண்டோடும் (ஆமோஸ் 5 : 24) "நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று முத்தமிடும். நீதி அவர் முன் செல்லும் (திருப்பாடல் 85 : 10—13)

**2011**
**டிசம்பர்**
**27**
**செவ்வாய்**

காலை
எஸ். 9:20–32

தி. வ.
எஸ். 9 : 28
**“இந்த நாட்கள் எல்லா தலை முறைகளிலும் ... நினைவு கூரப்பட்டு ஆசரிக்கப்பட வேண்டும்”**

மாலை
1தீமோ. 1:15–20

சிந்தனை
**பண்டிகை இறைவனை நினைவு கூரும் வழிபாடாக மாறட்டும்.**

மன்னா சேர்ப்போம்

# நினைப்பூட்டுபவர்

எபிரேயத்தில் “பூர்” அல்லது “பூரிம்” என்றால் “சீட்டு” (LOTS) என்று அர்த்தம். யூத குலத்தையே நிக்ரகம் செய்யும் கொலை பாதகச் சீட்டு (எஸ்தர் 3 : 6—7) சீட்டு சுட்டிய நாள் “அதார்” (பன்னிரண்டாம்) மாதம் பதின்மூன்றாம் நாள்! யூதர்களுக்குச் சாவுமணி அடிக்கும் மரணநாள்! ஆக, யூதர்களைப் பொறுத்தமட்டில் “ பூரிம்” என்றால் “சாவு”—மரணம் என்றே அர்த்தம்! ஆனால் என்னே விந்தை! சாவு “வாழ்வு” ஆகின்றது! மரணம் “கொண்டாட்டம்” ஆகின்றது! பூரிம் “பண்டிகை” ஆகின்றது எஸ்தர் நூல் தரும் அதி அற்புதமான நற்செய்தி இது (எஸ்தர் 9 : 15—23)

இது பண்டிகைக் காலம் உலகம் எங்கும் கொண்டாடப்படும் ஒரே பண்டிகை கிறிஸ்மஸ்! கிறிஸ்தவர்கள் மட்டும் அல்ல, கிறிஸ்தவர் அல்லா தோரும் கொண்டாடும் ஒரே பண்டிகை கிறிஸ்மஸ்! பூரிம் பண்டிகை “யூதர்கள்” பெற்ற மாபெரும்விடுதலையை நினைவூட்டும்; கிறிஸ்மஸ் பண்டிகை யூதர்கள் மடடும் அலல், ஏன் கிறிஸ்தவர்கள் மடடும் அல்ல, அனைத்து உலகமும் பெற்ற ஒப்பற்ற விடுதலையை உன்னத விடுதலையைப் பறைசாற்றி அறிவிக்கும் ஒரே பண்டிகை? ஆனால், அநேக பண்டிகைகள் உண்மைப் பொருள் இழந்து, தலைவிரிக் கோலமாகவே காட்சி தருகின்றன.

பண்டிகையா? வாழ்க்கையா? ஆரவாரமானப் பண்டிகைகள் அலங்கார வழிபாடுகள், ஆடம்பரத் திருவிழாக்கள், ஜெபங்கள், உபவாசக்கூட்டங்கள், நற்செய்தி விழாக்கள் என இரைச்சலே இன்று வழிபாடு ஆகிவிட்டது. ஆமோஸ் 5 : 21—24—இல் ஆரவாரப் பண்டிகைகளை வெறுத்து அருவருக்கிறேன். நீங்கள் இரைச்ச—ட்டு பாடும் பாடல்களை நிறுத்துங்கள், உங்கள் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன்” என்றும் ஓசியா 6 : 4—6—இல் பண்டிகைகள், திருவிழாக்கள், ப—கள் போன்ற இரைச்சல்களால் இறைவனைப் பரியப்படுத்த முனைந்தனர் இஸ்ரவேல் மக்கள் ஆனால், ப—யை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன் எனவும் முழங்குகின்றார் இறைவன்!

நம் பண்டிகைகள் அர்த்தமுள்ளப் பண்டிகைகள் ஆகட்டும் வெறும் ஆரவாரம் இரைச்சல் அல்ல—நீதி, நியாயம், நேர்மை நாணயம், பரிவு பாசம் இரக்கம் நம் வாழ்வில் பொங்கிப் புலரட்டும் பண்டிகை வாழ்க்கையாக மலரட்டும்!!



**2011**
**டிசம்பர்**
**28**
**புதன்**

காலை
யோ. 1:15–23

தி. வ.
யோவா. 1 : 16
**“அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம்”**

மாலை
ஏசா. 33:1–13

சிந்தனை
**நிறைவாழ்வுக்கு குறைகளை களைந்து இயேசுவைச் சாருவோம்.**

மன்னா சேர்ப்போம்

# நிறைவாக்குபவர்

கடவுளின் மாபெரும் மீட்பின் திட்டம் இயேசுகிறிஸ்துவின் வருகையில் நிறைவேறுகிறது என்பதை முழுக்கு முனிவர் யோவான் சான்றாக முழங்குகிறார். யோவானுடைய சான்று தன்னை மறைத்து கிறிஸ்துவை முதன்மைபடுத்துவதை புரிந்துகொள்ள முடிகின்றது.

இவரது நிறைவு என்று சொல்லும்போது யோவா. 1 : 14—ஆம் வசனத்தில் “வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார் அவரது மாட்சியை நாங்கள் கண்டோம் அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருநதார்” வாக்கு மனிதராகி நம்மிடையே வாசம்பண்ணும் நிறைவு தந்தையாம் கடவுளோடுள்ள உறவின் நிறைவாகும். இந்த உறவில் கடவுளின் திருவுளத்தை நிறைவு செய்வதே அவருடைய மாட்சி. இவ்வாறு நிறைவாக்கும் கிறிஸ்துவின் உறவை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

கிறிஸ்துவால் வரும் நிறைவை பெற்றுக்கொள்வதற்கு பவுலார் கெலோசேயருக்கு கடிதம் எழுதும் போது இறைத்தன்மையின் முழு நிறைவும் உடலுருவில் கிறிஸ்துவுக்குள் குடிகொண்டிருக்கிறது. அவரோடு இணைந்திருப்பதால் நீங்களும் நிறைவு பெறுகிறீர்கள் (கொலோ. 2 : 9—10) என்கிறார். இன்று வருடத்தின் நிறைவுக்குள்ளாக வந்திருக்கும் நமது வாழ்வில் நிறைவாக்கும் கிறிஸ்து நம்மை நிறைவாழ்வுக்கு நேராய் நடத்த சித்தம் கொள்கிறார். பவுலாரின் வார்த்தைபடி கிறிஸ்து இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டீர்கள் அவரோடு இணைந்து வாழுங்கள். அவரில் வேரூன்றியவர்களாகவும், அவர் மீது கட்டியெழுப்பபட்டவர்களாகவும் இருங்கள். நீங்கள் கற்றுக்கொண்ட விசுவாசத்தில் உறுதியாக நில்லுங்கள் நன்றி மிக்கவர்களாய்த் திகழுங்கள்” (கொலோ. 2 : 6—7) என்ற கட்டளையை ஏற்றுக் கொண்டவர்களாய்; கிறிஸ்துவில் வேரூன்றி, செழித்து நற்கனிகொடுக்கும் மரமாய், கிறிஸ்துவின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்ட கட்டிடமாய் நமது விசுவாச வாழ்வில் முன்னேறுவோம்; நிறைவாக்கும் கிறிஸ்து தாமே நம்மை நிறைவாழ்வுக்கு நேராய் வழிநடத்துவாராக.

# இறையாசி பெற்ற குடும்பம்

**2011**
**டிசம்பர்**
**29**
**வியாழன்**

காலை
சங். 128

தி. வ.
சங். 128 : 2
**"...உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்"**

மாலை
மத். 2:13–23

சிந்தனை
**கடவுளைத் தலைவராகக் கொண்ட குடும்பம் இறையாசிப் பெற்ற குடும்பம்.**

மன்னா சேர்ப்போம்

"குடும்பம்'' என்ற அமைப்பானது தியாகங்களாலும், அன்பாலும், சுயநலமின்மையாலும் உருவாகும் தேன்கூடு போன்றது. அதை சிதைப்பது எளிது, செதுக்குவது அரிது. இன்று பல்வேறு காரணங்களால் குடும்பம் என்ற அமைப்பு சிதைந்து வருகிறது. நாகரிகத்தின் முதல்படியை அடைந்ததற்கு முழுமுதற்காரணம் "குடும்பம்" ஆகும். அதுவே அனைத்து கட்டுப்பாடுகளுக்கும் ஆதாரமாக விளங்குகிறது. "குடும்பம் ஒரு கோயில்" என்றும் "குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்" என்றும் சிறப்பாக உருவகப்படுத்தியுள்ள நிலையில், உடைந்த குடும்பங்களால் உலகம் விரிந்து கிடக்கிறது. *சங். 128*—இல் இறையாசி பெற்ற குடும்பம் எப்படி காணப்படும் என்றும், இறையாசிப்பெற நாம் வாழவேண்டிய வழியையும் காண்பிக்கிறது.

ஆண்டவருக்கு அஞ்சி வாழவேண்டும் *(சங். 125 : 1a)* என்பதை பலர் அறியாமல் அவரவர் விருப்பமான வாழ்க்கை வாழ்கின்றனர். இறைவனுக்கு அஞ்சுவோர் ஞானத்தால் நிறைந்து, வாழ்க்கையை கடவுள் விரும்புகிற வண்ணமாக சந்தோஷத்தோடு வாழ்வர்.

ஆண்டவரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து *(சங் 125: 1b)* வாழவேண்டும். படைப்புகளின் ஆதிக்கம் பெருத்த இக்காலத்தின் மனிதன் கடவுளுக்கு கீழ்ப்படிதல் அரியதொன்றாகிவிட்டது. கெட்டவழி, நல்லவழி—இரண்டும் உலகில் உண்டு. ஜீவனுள்ளோர் தேசத்தில் வாசம்செய்ய விரும்பினால் ஜீவனுள்ள, வாழ்வளிக்கும் இறை வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

உழைத்து வாழவேண்டும் *(சங். 128 : 2)* என்பது அடுத்த படியாகும். இயந்திரங்களின் பெருக்கத்தாலும், அதிநவீன கண்டுபிடிப்புகளாலும் மனித உழைப்பு மழுங்கிக் கொண்டிருக்கிறது. உழைப்போருக்குரிய பலன் மாலைக்குள் கிடைக்கச்செய்யும் இறைவன் கடுமையாக உழைப்போரை நற்பேறு காணச் செய்வார்.

பாக்கியமும், நலமும் பெற்ற சிறந்த குடும்பங்கள் இறைவனுக்கு பயந்து, அவருக்கு கீழ்ப்படிந்து, உழைத்து வாழும்.



# ஆண்டவரே நம் துணையாளர்

**2011**
**டிசம்பர்**
**30**
**வெள்ளி**

காலை
சங். 121

தி. வ.
சங். 121 : 5
**"...கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்"**

மாலை
யோ. 12:26–36

சிந்தனை
**தனிமையில் இறைவனைத் தேடுவோம் அவரே நம் துணையாளர்.**

மன்னா சேர்ப்போம்

அந்த நாட்டு அரசன் தனது பிறந்த நாள் பரிசாக சிறையில் இருக்கும் 10 திருந்திய கைதிகளை விடுதலையாக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால் அந்த 10 பேருக்கும் அவர்களின் சொந்தக்காரர்கள் பொறுப்பெடுத்துக் கொள்ளவேண்டும் என்பது நிபந்தனை. ஒன்பது பேருடைய உறவினர்கள் வந்து தாங்கள் பொறுப்பெடுத்துக்கொள்கிறோம் என்று சொல்— அழைத்து சென்றனர். ஒருவன் மட்டும் தனியே நின்றான். நீ தனிமையில் நிற்கிறாயே என்று அரசன் கேட்டார். சொந்தம் என்று சொல்— எனக்கு யாருமே இல்லை என்று சொன்னான். உடனே அரசர் அவன் தோளில் தன் கரத்தை வைத்துச் சொன்னான், "கலங்காதே, இனிமேல் நானே உனக்கு சொந்தக்காரன், உன்னை நான் பொறுப்பெடுத்துக் கொள்கிறேன்". என்று சொல்— விடுதலை செய்தான். இன்றும் எத்தனையோ பேர் எனக்கென்று யாருமில்லையே, நான் அனாதையாக நிற்கிறேனே, என்னை தேற்றுவார் யார்? எனக்கு துணை ஒருவர் உண்டோ? என்று ஏங்கி, தவித்துக் கொண்டிருக்கிறார்கள் நம்மை சொந்தமாக்கிக்கொள்ள நமக்கு துணை நிற்பவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மட்டுமே.

சகோதரர்களால் பகைக்கப்பட்ட யோசேப்பு, தான் அனாதையாகி விட்டேனே என்று வேதனைப்படுகிறார். எனவே தான் யாக்கோபு இறப்பதற்கு முன்பு "உன் தந்தையின் இறைவனே உனக்கு துணையாய் இருப்பார்'' என்று ஆசீர்வதிக்கின்றார். *(தெ. நூ. 49 : 25)*

கோ—யாத்தை சிறுவன் தாவீது போரிடச் சந்தித்தபோது, நீ வாளோடும், ஈட்டியோடும் வருகிறாய், நானோ ஜீவனுள்ள என் கடவுளின் நாமத்தில் வருகிறேன் என்று சொல்— கோ—யாத்தை வென்றார். *(1சாமு. 17 : 45—51)* சிங்கங்களின் குகையில் தூக்கி வீசப்பட்ட தானியேல் கடவுளின் துணையோடு இருந்ததால், என் கடவுள் தம் தூதரை அனுப்பி சிங்கங்களின் வாய்களைக் கட்டிப்போட்டார் (தானி. 8:20) என்று ஆற்றலோடு சொல்ல முடிந்தது. எனவே நாம் இயேசுவை துணையாக இறுகப் பற்றிக்கொள்வோம். எப்போதும் அவர் துணையாய் நின்று விடுதலையும், வெற்றிகளையும் தருவார்.

**2011**

**டிசம்பர்**

**31**

**சனி**

**ஆண்டு நிறைவு நாள்**

காலை

யாத். 33:12–23

தி. வ.

யாத். 33 : 14

**"என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்"**

மாலை

லூக். 12:22–34

சிந்தனை

**கடவுளில் கொள்ளும் நம்பிக்கை புதுவாழ்வுக்கு வழிகாட்டும்.**



# கடவுளில் நம்பிக்கை கொள்ளுங்கள்

அன்னைத் தெரசாவின் அரும்பணிகளைப்பற்றிக் கேள்விப்பட்ட ஒருவர் அவர்களை பார்க்க வந்தார். அங்கு அவர்கள் கண்காணிக்கிற முதியோர் இல்லம், அனாதை இல்லம், ஊனமுற்றோர் இல்லம், மூளை வளர்ச்சி குன்றியோரை பராமரிக்கும் இல்லம், இவற்றோடு அன்னை தெரசாவுடனிருந்த சகோதரிகளின் பாசமிக்க பராமரிப்பு, அணுகுமுறை இவையெல்லாம் அம்மனிதரை வெகுவாகக் கவர்ந்தது. அன்னை தெரசாவைப் பார்த்து, மிகக் குறைவான காலகட்டத்தில், இந்தியா மட்டுமல்ல, உலகம் முழுவதும் பேசப்படுகிறீர்கள். உலகம் முழுவதும் உங்கள் பணி பரவ காரணம் என்ன? என்று கேட்டார். அதற்கு அன்னை தெரசா அவரை ஆலயத்திற்குள் அழைத்து சென்று அமரவைத்து சொன்னார், இதோ இயேசு நாதர் இங்கிருக்கிறார், அவர் கொடுக்கிற பெலத்தினாலே நாங்கள் இவற்றைச் செய்ய முடிகிறது. நானும், இங்குள்ள அருட்சகோதரிகள் அனைவரும் கடவுளை நம்புகிறோம், தினமும் ஒரு மணி நேரம் இயேசுவின் பாதம் அமர்ந்து ஆற்றல் பொறுகிறோம், அவர் எங்களை பயன்படுத்துகிறார் என்றார். இன்று மக்கள் பலவிதமான முயற்சிகளை, தான தர்மங்களை செய்யவேண்டும் என்று திட்டமிட்டு கடவுளிடம் நம்பிக்கைக் கொள்ளாமலேயே அவருடைய உடனிருத்தலை உணரவும், செயல்படவும் ஆசைப்படுகின்றனர்.

மிகப்பெரிய கூட்டமாகிய இஸ்ரவேலரை விடுதலைப் பயணமாக மோசே அழைத்து வந்தார். முறுமுறுப்புகள், எதிர்நின்ற செங்கடல், மக்களின் பாவம் நிறைந்த வாழ்வுகளின் மத்தியிலும், பயணம் முன்னேறுவதற்கு காரணம் இறைவன் மீது மோசே கொண்ட நம்பிக்கையே அல்லாமல் வேறில்லை. "உன்னை எங்களுக்கு தலைவனாக வைத்தவன் யார் என்று மோசேயிடம் கேட்ட அதே மக்களை நான் தான் உங்களை வழிநடத்த இறைவனால் அனுப்பப்பட்ட மனிதன் என்று தைரியமாக செல்ல உதவியாக அமைந்தது இறை நம்பிக்கையே. ஏனெனில் அவர் நம்மை நடத்திச் செல்பவர். அவர் சமூகம் நம்முன்னே செல்லும் இறைவனில் நம்பிக்கைக் கொண்டு தடைகளைத் தாண்டி புதிய அனுபவங்களைப் பெறுவோம்.